முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் – 2026" விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்தின் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் ஆர். ராஜேந்திரன், எஸ்.எம்.நாசர், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சுற்றுலாத்துறை மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், என்.வி.குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் (CEO ENNVEE Group) வீர வேணுகோபால், M/s. Switch Mobility நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எஸ். கணேஷ்மணி, அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்டது!

அயலகத் தமிழர் தினத்தையொட்டி இரட்டைத் தள மின்சார பேருந்து சேவை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 13 - அயலகத் தமிழர் தினத்தையொட்டி, பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்து சேவையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து, தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் - 2026" விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் (NRI) மற்றும் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் இணைந்து, ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் ஒரு இரட்டைத் தள மின்சார (EV) பேருந்தை ஹிந்துஜா அறக்கட்டளை, மும்பை மூலமாக தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு (TTDC) பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை இயக்குவதற்காக வழங்கப்பட்ட இப்பேருந்தின் சேவையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் – 2026" விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அயலகத் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (DoubleDecker EV Bus) பேருந்தின் சேவையினை தொடங்கி வைத்தார்.

இப்பேருந்து மூலம் இயக்கப்படும் சுற்றுலா சேவைகள், சென்னை நகரின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள், குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த, தகவல் சார்ந்த மற்றும் அனுபவமிக்க சுற்றுலா அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது.

முதற்கட்டமாக சென்னையில், முன்மொழியப்பட்ட சுற்றுலா வழித்தடத்தின் படி, TTDC தலைமையகம் - LIC - ஸ்பென்சர் பிளாசா - மக்கா மஸ்ஜித் - பி. ஓர் & சன்ஸ் (வாட்ச் டவர்) - பல்லவன் சாலை - பாடிகார்டு முனீஸ்வரர் கோவில் - ராஜா அண்ணாமலை மன்றம் - சென்னை உயர்நீதிமன்றம் - தலைமைச் செயலகம் - ரிசர்வ் வங்கி - சென்னை துறைமுகம் - வெற்றி போர் நினைவுச்சின்னம் - நேப்பியர் பாலம் - பேரறிஞர் அண்ணா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி. ஆர். அவர்கள் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆகியோரது நினைவிடங்கள் - மெரினா கடற்கரை - கலங்கரை விளக்கம் - பட்டினப்பாக்கம் கடற்கரை - சாந்தோம் தேவாலயம் - அகில இந்திய வானொலி - கலங்கரை விளக்கம் காவல்துறை தலைமை அலுவலகம் - குயின்மேரீஸ்கல்லூரி - விவேகானந்தர் இல்லம் - பிரெசிடென்சி கல்லூரி - எழிலகம்- சென்னை பல்கலைக்கழகம் - தூர்தர்ஷன் கேந்திரா - இராஜாஜி மண்டபம் - ஓமந்தூரார் அரசு மருத்துவமனை - TTDC தலைமையகம் ஆகிய வழித்தடங்களில், நகரின் முக்கிய சுற்றுலா மற்றும் பாரம்பரிய இடங்களை முழுமையாகக் காணும் வகையில் பனோரமிக் (Panoramic) பார்வை வசதியுடன் இப்பேருந்தின் சேவை இயக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சுற்றுலாத்துறை மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் ஷேனு அகர்வால், என்.வி.குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் (CEO ENNVEE Group) வீர வேணுகோபால், M/s. Switch Mobility நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எஸ். கணேஷ்மணி, அயலகத் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி அலுவலக கட்டடத்தினை நேற்று (12.01.2026) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், நகராட்சி நிருவாகத் துறை இயக்குநர் பா.மதுசூதன் ரெட்டி , பேரூராட்சிகள் துறை இயக்குநர் மா.பிரதீப் குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், பேரூராட்சித் தலைவர் சொ.கணேசமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர கிழக்கு மண்டல தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி ஏற்பாட்டில் 1049 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்திட கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றி 1049 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். கூட்டத்தில் ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.தில்லைசெல்வம், சி.எஸ்.ஆனந்த், டி.ஸ்ரீதர் ரொட்ரிகோ, ஐ.கேட்சன், ஆர்.சதாசிவன், எம்.மதியழகன், த.செல்வன், ஏ.சுரேந்திர குமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், என்.பி.துரை, மு.சேக்மீரான், த.ஜீவா மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.